**குளியாப்பிட்டிய பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு குளியாபிட்டிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள நிதிக்கூற்றுக்களின் மூலம் மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 75,618 பெறுமதியான காரியாலய உபகரணங்களின் பெறுமதி குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 835,068 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டில் அரச நிறுவனமொன்றிற்கு நன்கொடையாகக் கிடைத்திருந்த ரூபா 150,000 பெறுமதியான புகை இயந்திரம் நிலையான சொத்துக்களில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் வீட்டுச் சொத்துக்கள் அபிவிருத்தி செய்து விற்பனை செய்யும் நடவடிக்கைகளில் கிடைத்த 01 ஏக்கர் 03 ரூட் 34.58 பேர்ச் பெறுமதியான சொத்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் 05 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் உரிய பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளில் காணப்பட்ட மீதிகளுக்கு இடையே ரூபா 2,285,913 ஆன வேறுபாடுகள் காணப்பட்டன.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 178,665,866 தொகையான பெறவேண்டிய கணக்குகளில் ரூபா 74,853,575 தொகை ஓராண்டிற்கு மேற்பட்ட காலப்பகுதியில் இருந்து அறவிடப்படாது காணப்பட்டன.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 43,999,446 தொகையான செலுத்த வேண்டிய மீதிகளில் இருந்து ரூபா 12,657,766 ஓராண்டிற்கு மேற்பட்ட காலப்பகுதியில் இருந்து தீர்வு செய்யப்படாது காணப்பட்டன.

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 169,735 கூட்டுத்தொகையான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) 1987 இன் பிரதேச சபை சட்டம்<br>154(1) | 6,244,921 | 30 ஏல விற்பனை காணிகளுக்காக மதிப்பிடப்பட்ட விற்பனை விலையில் 01 சதவீதம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) | | |
| i. 207 ஆம் விதி | 10,626,541 | 2017 ஜனவரி முதல் ஒக்தோபர் வரை 66 சந்தர்ப்பங்களில் பொதுப் போட்டி போட்டியொன்றில்லாமல் களஞ்சியப் பொருட்கள் கொள்வனவு |

| | | |
|---|---|---|
| | | இடம்பெற்றிருந்தது. |
| ii 194 மற்றும் 212 ஆம் விதிகள் | 5,798,350 | இருப்பு பொருட்கள் இருப்பு பதிவேடுகளிலும் களஞ்சிய இருப்பு புத்தகங்களிலிலும் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. |
| iii. 218 ஆம் விதி | 204,072,234 | சபைக்குச் சொந்தமான சகல காணி மற்றும் கட்டிடங்கள் ஆண்டிற்கு ஒரு தடைவ பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 70,720,262 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 63,234,039 ஆக காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 1,711 | 2,111 | 1,931 | 658 | 1,331 | 1,868 | 1,949 | 479 |
| (ii) | வாடகை | 8,203 | 9,795 | 1,757 | 58 | 8,634 | 8,634 | 8,659 | 65 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 514 | 642 | 642 | - | 549 | 549 | 554 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 138,826 | 156,227 | 149,192 | 156,993 | 78,429 | 109,429 | 114,814 | 149,958 |
| | மொத்தம் | 149,254 | 168,775 | 153,522 | 157,709 | 88,943 | 120,480 | 125,976 | 150,502 |

**குறிப்பு**

மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் முன்னைய ஆண்டிற்குரியதாக அறவிடப்பட்ட ரூபா 80,829,000 மில்லியன் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட ரூபா 150 மில்லியன் நிலுவை மற்றும் ரூபா 168 மில்லியன் பெறுமதியான ஆண்டின் பட்டிலிடப்பட்ட பெறுமானத்தில் நூறிற்கு 48 சதவீதம் பெறுமதியான ரூபா 153 மில்லியன் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் மேலும் ரூபா 157 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

ஆண்டினுள் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாத காரணத்தினால் ரூபா 273,573 பெறுமதியான வீதவரி, ரூபா 318,445 பெறுமதியான ஏக்கர் வரி மற்றும் ரூபா 66,000 பெறுமதியான வியாபார வரி என்பனவற்றை மீளாய்வாண்டின் இறுதியில் கணக்குகளில் நிலுவையாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 27,160,126 ஆன நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 119,383,608 ஆன முத்திரைக் கட்டணங்களும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 14 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

#### (ஆ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. மாதாந்தம் சேகரிக்கப்படும் 50 தொன் கழிவுப்பொருட்களில் 36 தொன் உக்கும் கழிவுப்பொருட்கள் கொம்போஸ்ட் உரம் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், எஞ்சிய கழிவில் காணப்படும் கண்ணரடித் துண்டுகள் சூழலுக்கு சாதகமான முறையில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ii. மீளாய்வாண்டில் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக மீண்டுவரும் செலவினமாக ரூபா 161,800,516 ஆன தொகையும் திண்மக் கழிவுப் பொருள் பிரிவின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மூலதனச் செலவினமாக ரூபா 1,870,180

தொகையும் 2016 ஆம் ஆண்டில் உயிரியல் பிரிவிற்காக ரூபா 1,000,000 செலவிடப்பட்டிருந்தது.

**(இ) சுற்றாடல் சிக்கல்கள்**

தென்னை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த 62 ஏக்கருக்கு மேற்பட்ட காணியொன்று வீடமைப்பு ஆதனங்களாக அபிவிருத்தி செய்வதற்கு விற்பனை செய்ய அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் அதன்மூலம் அதிகாரப்பிரதேசத்தில் சுற்றாடல் தாக்கம் மதிபபீடு செய்யப்படடு அதன் பாதகமான தாக்கத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்**

மீளாய்வாண்டில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருக்கவில்லை.

## 3.2 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை**

மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த மற்றும் உள்ளவாறான பதவியணினர் முறையே 144 மற்றம் 157 ஆக இருந்ததுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) விசேட தரததிலான தரமொன்றம், 06 நூலகர் பதவிகள், 03 முன்பள்ளி பாடசாலைக் காப்பாளர் பதவிகள், 03 வருமான நிர்வாகி பதவிகள் என 13 வெற்றிடங்கள் காணப்பட்டன. அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணிக்குள் உள்ளடக்கப்படாத 23 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி மன்ற திணைக்களத்தினால் இணைக்கப்பட்டிருந்தனர். மேலும் ஆரம்ப பதவிகளுக்குரிய மூன்று உழியர்கள் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**(ஆ) ஊழியர் கடன்**

சபையிலிருந்து சேவையை விட்டுச் சென்ற, உத்தியோகத்தரொருவரிடமிருந்து ரூபா 124,624 ஆன இடர் கடன் தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

வீதிகளை நிர்மாணித்தல் மற்றம் பராமரிப்பிற்காக பயன்படுத்தும் சபையிடமிருந்த வதி பதப்படுத்தலொன்று, மோட்டார் கிரேடர் ஒன்று மற்றும் பெக்கோ லோடரொன்று இருக்கையில் மீளாய்வாண்டின் போது அச்செயற்பாடுகளுக்காக வெளியே பெற்ற வாகனங்களுக்காக வெளிநிறுவனங்களுக்கு ரூபா 4,816,901 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.4 பெறுகை

### 3.4.1 பெறுகை திட்டம்

சபையினால் 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 பிரிவின் பிரகாரம் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை செயற்பாடுகள் பட்டியலிடப்பட்டு பிரதான பெறுகை வழிகாட்டல் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அடுத்த ஆண்டிற்கான பெறுகை செயற்பாடுகள் விரிவாக தயாரிக்கப்படாமை மற்றும் பெறுகைத் திட்டம் 06 மாதங்களுக்கு மேற்படாத காலத்தில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 வழங்கல் மற்றும் சேவைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் 2017 ஜனவரி முதல் ஒக்தோபர் வரையில் 66 சந்தர்பங்களில் ரூபா. 10,626,541 இற்கு எந்தவித போட்டியுமின்றி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததோடு, அந்த நிறுவனங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 858,001 பெறுமதியான பொருட்கள் 07 ஆம் திகதியிலிருந்து 30 திகதியை கடந்து தாமதமான 05 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ஆ) பெறுகை வழிகாட்டல் கோவையின் சட்டங்கள் பிரகாரம் கேள்விகளைக் கோரும் விபரங்கள் உள்ளடங்கும் ஆவணங்கள் தபாலில் அல்லது தனிப்பட்ட முறையில் கேள்விதாரரொருவருக்காக பெற்றுக் கொள்ள திட்டமிடப்பட வேண்டியிருந்த போதும், ரூபா. 1,580,515 பெறுமதியான கொள்வனவுகள் செய்யப்பட்ட 19 சந்தர்ப்பங்களுடன் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்ட ஆவணங்களை கேள்விதாரர்களுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

(இ) கருங்கற்களுடன் தொடர்புடைய பொருட்களை விநியோகிப்பற்கான விநியோகஸ்தர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தும், 2013 ஆம் ஆண்டில் விலைகளை கோருவதன் மூலம் தேர்தெடுக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து மீளாய்வாண்டில் 67 சந்தர்ப்பங்களில் ரூபா. 14,966,268 பெறுமதியான கருங்கற்களுடன் தொடர்புடைய உற்பத்திகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்த நிலைமையானது 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) 207 விதிக் கோவைகளிற்கு முரணான நடவடிக்கையொன்றாகும்.

(ஈ) 2012 ஜனவரி 05 ஆம் திகதிய 01/2012 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பிட்ட சங்கங்களின் நிதி நிலைமை பற்றி உறுதி செய்யப்படாது 09 சங்கங்களுக்கு மொத்தமாக ரூபா. 5,4012,165 பெறுமதியான 09 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தது.

(உ) ரூபா. 3,612,000 செலவிடப்பட்டு 40 கணிணிகளின் கொள்வனவுடன் தொடர்புடைய விவரக் குறிப்புகள் பத்திரிகை விளம்பரங்களில் காட்டப்படாதிருந்ததுடன், குறிப்பிட்ட கட்டணத்தை செலுத்தும் முன் அக் கணிணிகள் குறிப்பிட்ட விவரக் குறிப்புகளிற்கு இணங்க காணப்பட்டதா என தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பரிசோதனை செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. விலை கோரும் விபரங்களுக்கமைய கணிணி இயக்க முறைமை வின்டோஸ் 10 ஆக இருக்கவேண்டியிருந்ததுடன், வின்டோஸ் 8.1 கணிணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**3.4.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காக்கபவத்த அங்குருகந்த வீதிக்கு அச்சுக்கல் பிடிக்கும் செயற்திட்டத்தின் இரண்டு ஓரங்களுக்கும் உயரம் குறைவாக இட்டமையால் ரூபா 39,735 கூடுதலாக ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) காக்கபவத்த அங்குருகந்த ஆகர வீதிக்கு அச்சுக்கல் பிடிக்கும் செயற்திட்டத்தின் இரண்டு ஓரங்களுக்கும் உயரம் குறைவாக இட்டமையால் ரூபா 39,945 கூடுதலாக ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அச்சுக்கல் பிடிப்பதற்காக கருங்கல் தூள் இட்டு சமாந்திரமாக பதப்படுத்தாமையால் அச்சுக்கல் ஒரே சீராக இடப்பட்டிருக்கவில்லை.

(இ) முருதன்னே காணிக்காக ரூபா 977,183 ஆல் தார் இட்டு அபிவிருத்தி செய்திருந்த வீதியின் ஒரு இடத்தில் 16.5x6 மீற்றர் அளவில் கீழிறங்கியிருந்தது. அவ்வாறே திவுல்கஸ் சந்தி முதல் நாவல் வடு வரை வீதியின் எஞ்சிய பகுதி தார் ஊற்றுவதற்காக ரூபா 686,392 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் குறித்த வீதயின் 600x600 மி.மீ அளவில் கீழிறங்கயிருந்தது.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 124 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்படாமையால் மீண்டெழும் செலவினம் ரூபா 25 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தமை மற்றம் ரூபகா 38,668,000 ஆன பாதீடு செய்யப்பட்ட மூலதன நிதிஏற்பாட்டை விஞ்சி ரூபா 96,757,439 ஆன மூலதன செலவினம் மேற்கொள்ளப்பட்டதன் பேரில் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளுக்காக நியமிக்கப்பட்டிருந்த மூன்று உத்தியோகத்தர்களுக்கு வழமையான கடமைகள் கையளிக்கப்பட்டிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 134.3 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | i. கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாமை. |
| | ii. பயன்பாட்டுப் பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்படாமை. |
| (ஆ) வருமானம் | பெறவேண்டிய நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) ஊழியர் முகாமை | நீண்டகாலமாக அறவிடப்படாத கடன்கள் காணப்பட்டமை. |
| (ஈ) ஒப்பந்தங்கள் | i. போதியளவு மேற்பார்வையின்மை |
| | ii. குறித்த விவரக் குறிப்புக்களுக்கு இணங்காத வகையில் நிர்மாணம் மேற்கொள்ளல் |